(Under Section 173 BNSS)

FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8318747

1. District : மாவட்டம் **Thoothukudi** PS: காவல்நிலையம் **Vigilance and Anti-Corruption Thoothukudi** Year: ஆண்டு **2026** FIR No.: மு.த.அ. எண் **07/2026** Date: நாள் **04.07.2026**

2. (i) Act சட்டம்: **Prevention of Corruption Act, 1988 as Amended in 2018** Sections பிரிவுகள்: **7 and 7(A)**

(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் **On 03.07.2026 Before 16.00 hrs** Date from : நாள் முதல் Date to : நாள் வரை

Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை

(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் **04.07.2026** Time : நேரம் **15.00 hrs**

(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் **04.07.2026** Time : நேரம் **15.00 hrs**

4. Type of Information : Written/ Oral / Electronic form : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம் **கணினி தட்டச்சு மூலமாக**

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் **Thoothukudi City Municipal Corporation Office, Tut Dist. About 12 Kms North East**

Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் **திரு.K.முருகன்** (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் **காளிமுத்து**

(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு (d) Nationality : நாட்டினம் **இந்தியன்** (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : தொழில் Deputy Tahsildar (g) Address : முகவரி Election - 2, District Collectorate, Thoothukudi

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

Tmt.V.Thilaka, aged 59/2026, W/o Tr.Anbalagan, Superintending Engineer (Muncipal Engineer), Thoothukudi City Municipal Corporation, Thoothukudi District and 2 anothers.

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம் **No**

9 Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

---

10 Total value of properties stolen / involved : ----
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11 Inquest Report / Un-natural death Case No. if any: ----
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12 FIR Contents (Attach separate sheet. if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது.

13 Action taken : Since the above report received from Commission of Police/Sub-Divisional Officer mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction

J.Anitha Inspector of Police

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14 Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

4.7.2026.

15 Date & Time of despatch to the court: **04.07.2026 at 17.00 hrs**
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும். நேரமும்

Name: பெயர் **S. PETER PAUL DURAI**
Rank: நிலை Deputy Superintendent of Police
No: எண்

Deputy Superintendent of Police
Vigilance And Anti Corruption
Thoothukkudi District
Thoothukkudi

Attachment to Column No.12 of First Information Report in Thoothukudi Vigilance and Anti-Corruption Cr.No.07/2026

பணிந்து அனுப்பப்படுகிறது.

1. Tmt.V.Thilaka, aged 59/2026, W/o Tr.Anbalagan, Superintending Engineer (Muncipal Engineer), Thoothukudi City Municipal Corporation, Thoothukudi District. 2. Tr.Rajesh Kannan, aged 51/2026, S/o Tr.S.Rengaraj, Junior Engineer, i/c Assistant Executive Engineer, Thoothukudi City Municipal Corporation, Thoothukudi District. 3. Tr.S.Sheik Naina Mohammed, Aged 33/2026, S/o Tr.Shahul Hameed, Office Assistant (Through CLC Basis) Thoothukudi City Municipal Corporation, Thoothukudi District. Residing at : No.148, Jailani Street, Thoothukudi -2.	தூத்துக்குடி மாவட்டம் தூத்துக்குடி மாநகராட்சி அலுவலகத்தில் பொறியியல் பிரிவில் பணிபுரியும் கண்காணிப்பு பொறியாளர் (மாநகராட்சி பொறியாளர்) திருமதி.V.திலகா மற்றும் அவருக்கு கீழ் பணிபுரியும் பொறியியல் பிரிவு அலுவலக ஊழியர்கள் மாநகராட்சி பகுதிகளில் மேற்கொள்ளப்படும் பணிகளுக்கு ஒப்புதல் மற்றும் பணி உத்தரவு மற்றும் நடைபெற்ற வேலைகளுக்கு பட்டியல் தொகை விடுவிப்பதற்கும் மற்றும் பணிகள் தொடர்பாக இதர பணிகளுக்கு ஒப்பந்ததாரர்களிடமிருந்து லஞ்சம் வாங்குவதாக கிடைத்த ரகசிய தகவலின் பேரில் 03.07.2026 ஆம் தேதி மாலை சுமார் 16.00 மணி முதல் இரவு 22.30 மணி

வரை துணை ஆய்வுக் குழு அலுவலர் நிலையில் திரு.K.முருகன், துணை வட்டாட்சியர் (தேர்தல்-2), துணை ஆய்வுக் குழு அலுவலர் நிலையில், தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலகம், தூத்துக்குடி மாவட்டம். அவர்களுடன் தூத்துக்குடி மாநகராட்சி பொறியியல் பிரிவு அலுவலகத்தில் நடத்திய திடீர் சோதனையின் அடிப்படையில் துணை ஆய்வுக்குழு அலுவலர் நிலையில் திரு.K.முருகன், அவர்கள் கொடுத்த புகார் மனுவை 04.07.2026-ம் தேதி நான் தூத்துக்குடி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அலுவலக பணியில் இருந்தபோது பிற்பகல் 15.00 மணிக்கு பெற்று தூத்துக்குடி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண் 07/2026, பிரிவு 7 of PC Act 1988 as Amended in 2018-ன் படி மார்ஜினில் கண்ட எதிரிகளின் மீது வழக்கு பதிவு செய்தேன். புகார் மனுவின் விபரம் பின்வருமாறு : அனுப்புநர் K.முருகன், துணை வட்டாட்சியர் (தேர்தல் - 2), மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,

தூத்துக்குடி. பெறுநர் : காவல் துணைக் கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, தூத்துக்குடி. அய்யா, பொருள் : தூத்துக்குடி மாவட்டம், தூத்துக்குடி மாநகராட்சி அலுவலகத்தில் பொறியியல் பிரிவு அலுவலக திடீர் தணிக்கை செயல்முறைகள் - சட்ட மேல் நடவடிக்கை எடுக்கக் கோருவது தொடர்பாக.****** தூத்துக்குடி மாவட்டம், தூத்துக்குடி மாநகராட்சி அலுவலகத்தில் மாநகராட்சி பொறியாளர் அலுவலகம் மற்றும் பொறியியல் பிரிவு அலுவலகம் ஆகியவற்றை எனது தலைமையில் தூத்துக்குடி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை காவல் துணைக் கண்காணிப்பாளர், காவல் ஆய்வாளர் திருமதி.வெ.அன்னலெட்சுமி மற்றும் போலீஸ் பார்ட்டி உதவியுடன் 03.07.2026-ம் தேதி மதியம் மாலை சுமார் 15.30 மணி முதல் 16.00 மணி வரை கண்காணித்ததில் தூத்துக்குடி மாநகராட்சி அலுவலகத்தில் மாநகராட்சி பொறியாளர் மற்றும் அவருக்கு கீழ் பணிபுரியும் பொறியியல் பிரிவு அலுவலக ஊழியர்கள் மாநகராட்சி பகுதிகளில் மேற்கொள்ளப்படும் பணிகளுக்கு ஒப்புதல் மற்றும் பணி உத்தரவு மற்றும் நடைபெற்ற வேலைகளுக்கு பட்டியல் தொகை விடுவிப்பதற்கும் மற்றும் பணிகள் தொடர்பாக இதர பணிகளுக்கு ஒப்பந்ததாரர்களிடமிருந்து லஞ்சம் பெற்று வருவதற்கான முகாந்திரம் தெரிய வந்ததால் 03.07.2026 மாலை சுமார் 16.00 மணி முதல் 22.30 மணி வரை மேற்படி அலுவலகத்தை திடீர் தணிக்கை செய்யப்பட்டது. மேற்படி தணிக்கையின் போது அந்த அலுவலகத்தில் கண்காணிப்பு பொறியாளராக (மாநகராட்சி பொறியாளர்) பணிபுரிந்து வரும் திருமதி.V.திலகா என்பவரது இருக்கைக்கு இடது பக்கம் இருந்த தனியாக காணப்பட்ட மூன்று டிராயருடன் கூடிய சிறிய மர ரேக்கில் மேல் ரேக்கினை திறந்து பார்த்த போது அதில் சில அலுவலக பேப்பர்களும் அதற்கு மேல் மடித்த நிலையில் 500 ரூபாய் நோட்டுகள் கத்தையாக காணப்பட்டது. அவற்றை எடுத்து எண்ணிப்பார்த்த போது அதில் ரூ.10,000/- காணப்பட்டது. அது குறித்து திருமதி.V.திலகா அவர்களிடம் விளக்கம் கேட்க அவரால் உரிய விளக்கம் அளிக்க இயலாமல் சந்தேகத்திற்கு இடமான வகையில் வைத்திருந்ததால் மேற்படி பணம் அவர் லஞ்சமாக பெற்ற பணம் என்று கருதி **ரூ.10,000/-ம்,** மாநகராட்சி பொறியாளர் அவர்களது அலுவலக அறை வாசலில் நின்று கொண்டிருந்த நபரான மாநகராட்சி பொறியாளரின் அலுவலக உதவியாளர் திரு.ஷேக் நெயினா முகம்மது என்பவரை விசாரித்த போது அவர் தான் மாநகராட்சி பொறியாளர் திருமதி.திலகா அவர்கள் சொன்னதின் பேரில் அவர்களால் சொல்லப்பட்ட நபர்களிடமிருந்து ஏற்கனவே பெற்ற பணத்தினை தனது வீட்டில் வைத்திருப்பதாக கூறியதின் பேரில் மாநகராட்சி

அலுவலகத்திற்கு அருகில் அமைந்துள்ள அவரது வீடான எண்.148, ஜெயலானி தெரு, தூத்துக்குடி-2 முகவரிக்கு சென்ற போது அவர் தனது வீட்டிலிருந்து ஒரு ஆரஞ்சு நிற பாலிதீன் கவரை எடுத்து வந்து ஆஜர் செய்ததை எடுத்துக் கொண்டு அவரையும் அழைத்துக் கொண்டு மாநகராட்சி பொறியாளர் அறைக்கு வந்து மாநகராட்சி பொறியாளர் திருமதி.திலகா அவர்கள் முன்பு உள்ள மேஜையில் அவர் முன்னிலையில் அந்த ஆரஞ்சு நிற பாலிதீன் கவரை சோதனை செய்த போது அதனுள் ஒரு கண்ணாடி கவர், பிரவுன் கலர் கவர் மற்றும் பச்சை நிற தபால் கவர் ஆகியவை பொதிந்த நிலையில் காணப்பட்டது. அதில் கண்ணாடி கவரை சோதனை செய்த போது அதில் தனித்தனி கத்தைகளாக மொத்தம் பணம் ரூ.44,500/- காணப்பட்டது. பிரவுன் கலர் கவரினை சோதனை செய்த போது அதில் கத்தையாக பணம் ரூ.1,00,000/- காணப்பட்டது. மேலும், பச்சை நிற கவரினை சோதனை செய்த போது அந்த கவரில் To The Executive Engineer, Thoothukudi Smart City Ltd., Corporation Office Campus, 113, Palai Road, Thoothukudi – 628002 என்ற முகவரியும் அதற்கு கீழ் விரைவுத் தபாலில் அனுப்பியதற்காக பார்கோடும் அதற்கு அருகே Tamilnadu Energy Development Agency, E.V.K., Sampath Maaligai, College Road, (5th Floor), Chennai – 600 006 என்ற சீலும் அடிக்கப்பட்டிருந்தது. அந்த கவரினுள் ரூ.500 நோட்டு கட்டுகள் 6 எண்ணம் ஆக மொத்தம் ரூ.3,10,000/- காணப்பட்டது. மேற்படி ஆரஞ்சு நிற கவருக்குள் தனித்தனி கவர்களில் காணப்பட்ட மொத்தப் பணம் ரூ.4,54,500/- (ரூ.44,500/- + ரூ.1,00,000/- + ரூ.3,10,000/-) குறித்து மாநகராட்சி பொறியாளர் திருமதி.திலகா அவர்களிடம் கேட்ட போது தூத்துக்குடி மாநகராட்சி ஒப்பந்ததாரர்கள் கொடுக்கும் பணத்தை தனது உதவியாளர் திரு.ஷேக் நெயினா முகம்மது பெற்று தருவார் அந்தப் பணம்தான் என்று தெரிவித்தார். மேற்படி பணம் வைக்கப்பட்டிருந்த கவரில் மாநகராட்சி செயற்பொறியாளர் முகவரியிட்டு இருந்ததாலும், அலுவலக உதவியாளர் திரு.ஷேக் நெயினா முகம்மது தானாகவே முன்வந்து கண்காணிப்பு பொறியாளர் சொன்னதின் பேரில் வசூல் செய்த பணத்தை வாங்கி அவருக்கு கொடுப்பதற்காக வைத்திருப்பதாக சொல்லி கவருடன் ஆஜர் செய்ததாலும், மேற்படி பணம் லஞ்சமாக பெற்று கண்காணிப்பு பொறியாளருக்கு கொடுப்பதற்காக வைத்துள்ள பணம் என்று கருதி சந்தேகத்தின் பேரில் மேற்படி தொகை மொத்தம் **ரூ.4,54,500/-** மற்றும் பணம் வைக்கப்பட்டிருந்த ஆரஞ்சு நிற பாலிதீன் கவர், அந்த ஆரஞ்சு நிற பாலிதீன் கவருக்குள் தனித்தனியாக பணம் வைக்கப்பட்டிருந்த (1.) கண்ணாடி கவர் -1, (2.) பிரவுன் நிற கவர் -1, (3.) பச்சை நிற

தபால் கவர் -1 ஆகியவை விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும், தூத்துக்குடி மாநகராட்சி பொறியியல் பிரிவு அலுவலக அறைக்குள் இளநிலை பொறியாளர் R.ராஜேஷ் கண்ணன் என்பவரது இருக்கையின் முன்புறமிருந்த மேஜையின் இடது பக்க டிராயரை திறக்கச் சொல்லி சோதனை செய்த போது அதனுள் இரண்டு கத்தைகளாக ரூ.500 நோட்டுகளும், ஒரு வெள்ளை நிற கவரும் காணப்பட்டது. ரூபாய் நோட்டுகளை எண்ணிப் பார்க்க அதில் ரூ.1,00,000/- காணப்பட்டது. மேலும், அந்த வெள்ளை நிற கவரினை பிரித்துப் பார்த்த போது அதில் தனித்தின கத்தைகளாக பணம் மொத்தம் ரூ.26,900/-மும் ஆக மொத்தம் ரூ.1,26,900/- காணப்பட்டது. அந்தப்பணம் குறித்து விளக்கம் கேட்க R.ராஜேஷ் கண்ணன் அவர்கள் அந்தப் பணம் குறித்து தனக்கு தெரியாது என்று தெரிவித்தார். மேலும், மேற்படி தொகை தனித்தனி கத்தைகளாக அவரது இருக்கையின் முன்புறமிருந்த மேஜையின் இடது பக்க டிராயருக்குள் சந்தேகத்திற்கிடமான வகையில் காணப்பட்டதால், ஒப்பந்ததாரர்களிடமிருந்து லஞ்சமாக பெற்ற பணம் என்று கருதி மேற்படி பணம் **ரூ.1,26,900/-** மற்றும் வெள்ளை நிற கவர் ஆகியவை விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும், R.ராஜேஷ் கண்ணன் அவர்களை விசாரித்த போது அவர் தான் தங்கியிருக்கும் அறையில் ரூ.1,50,000/- வைத்திருப்பதாக தெரிவித்ததன் பேரில், அவரது தற்போதைய குடியிருப்பு முகவரியான தூத்துக்குடி மாநகராட்சி அலுவலகத்திற்கு அருகில் உள்ள மீனாட்சிபுரம் கிழக்கு முதல் தெருவில் அமைந்துள்ள அவர் தங்கியிருக்கும் அறையிலிருந்து ஒரு வெள்ளை கருப்பு நிற பாலித்தின் கவரில் சுற்றப்பட்ட பணத்தை எடுத்து வந்து அவர் ஆஜர் செய்ததின் பேரில் அதனை எடுத்து எண்ணிப் பார்த்த போது அதில் ரூ.1,58,500/- காணப்பட்டது. அந்தப் பணம் குறித்து அவரிடம் விளக்கம் கேட்க அலுவலகத்தில் இருந்த பணம் குறித்து தனக்கு எதுவும் தெரியாது என்றும், தங்கியிருக்கும் அறையில் இருந்த பணம் தனது செலவிற்காக வைத்திருந்த பணம் என்றும் முன்னுக்குப்பின் முரணாக பதிலளித்தாலும், மேற்படி பணம் அவர் வசம் வந்ததற்கான ரசீது போன்ற ஆதாரங்கள் ஏதும் சமர்ப்பிக்காததாலும் மேற்படி பணம் ஒப்பந்ததாரர்களிடமிருந்து லஞ்சமாக பெற்ற பணம் என்று கருதி **ரூ.1,58,500/-** அந்த பணம் வைக்கப்பட்டிருந்த வெள்ளை கருப்பு நிற பாலித்தின் கவர் ஆகியவை கைப்பற்றப்பட்டது. மேற்படி திடீர் தணிக்கையின் போது மொத்தம் (ரூ.10,000/- + ரூ.4,54,500/- + ரூ.1,26,900/- + ரூ.1,58,500/- =) **ரூ.7,49,900/-ம்,** (1.)ஆரஞ்சு நிற பாலிதீன் கவர் - 1, (2.)கண்ணாடி கவர் -1, (3.)பிரவுன் நிற கவர் -1, (4.)பச்சை நிற தபால் கவர் -1, (5.)வெள்ளை நிற கவர்-1, (6.) வெள்ளை

கருப்பு நிற பாலித்தின் கவர்-1ஆகியவை நேற்று 03.07.2026-ம் தேதி மாலை சுமார் 16.00 மணி முதல் 22.30 மணி வரை தயார் செய்யப்பட்ட செயல்முறைகள் மூலம் கைப்பற்றப்பட்டது. மேலும், மேற்படி சோதனையின்போது தூத்துக்குடி மாநகராட்சி பொறியாளர் திருமதி.வ.திலகா, இளநிலை பொறியாளர் திரு.R.ராஜேஸ் கண்ணன், அலுவலக உதவியாளர் திரு.ச.ஷேக் நெயினா முகம்மது மற்றும் பொறியியல் பிரிவில் ஆஜரில் இருந்த 17 அலுவலக பணியாளர்களிடமும் எனது முன்னிலையில் வாக்குமூலங்கள் பதிவு செய்யப்பட்டது. மேற்படி கைப்பற்றப்பட்ட பணம் ரூ.7,49,900/- மற்றும் செயல்முறையில் கைப்பற்றப்பட்ட ஆவணங்களை தங்களிடம் ஒப்படைத்து தூத்துக்குடி மாநகராட்சி கண்காணிப்பு பொறியாளர் திருமதி.V.திலகா, இளநிலை பொறியாளர் திரு.R.ராஜேஷ் கண்ணன் மற்றும் அலுவலக உதவியாளர் திரு.ஷேக் நெயினா முகம்மது ஆகியோர்கள் மீது சட்டப்படியான நடவடிக்கை எடுக்க கேட்டுக்கொள்கிறேன். Sd/- 04.07.2026 (K.Murugan), Deputy Tahsildar (Election – 2), District Collectorate, Thoothukudi. Sir, Received the complaint on today (04.07.2026) at 15.00 hrs and registering the complaint as Thoothukudi V&AC Cr.No.07/2026, U/s 7 of PC Act, 1988 as Amended in 2018. Sd/- 04.07.2026, S.Peter Paul Durai, Deputy. Supdt. of Police, V&AC, Thoothukudi Detachment. இதன் அசல் முதல் தகவல் அறிக்கை, திரு.K.முருகன் அவர்களின் அசல் புகார் மனு மற்றும் தூத்துக்குடி மாவட்டம் தூத்துக்குடி மாநகராட்சி பொறியாளர் அலுவலகத்தில் வைத்து தயார் செய்த செயல்முறைகள் ஆகியவற்றை இணைத்து மாண்புமிகு முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி, தூத்துக்குடி அவர்களுக்கு அனுப்பியும் இதர நகல்களை சம்பந்தப்பட்ட உயரதிகாரிகளுக்கு அனுப்பியும் ஒரு நகலை வழக்கு விசாரணைக்காக திருமதி.J.அனிதா, காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, தூத்துக்குடி பிரிவு அவர்களிடம் ஒப்படைக்கிறேன்.

4.7.2026

Deputy Superintendent of Police
Vigilance And Anti Corruption
Thoothukkudi District
Thoothukkudi